



<u>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - சேலம் மாவட்டம்</u>

<u>சேலம் மாவட்டம்</u>

<u>காடையாம்பட்டி பேரூராட்சி</u>

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், காடையாம்பட்டி பேரூராட்சி, காடையாம்பட்டி தெற்கு கிராமம், சர்வே எண் ? **364/3B** -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.(திட்டமில்லாத பகுதி)

| | | |
|---|---|---|
| கோப்பு எண் | : | SLM / 74JXM2A7 / 7463 / 2022 |
| இணையதள விண்ணப்பம் எண் | : | 74JXM2A7 |
| அளவு | : | 1 : 400 |

I. <u>குறிப்பு</u>:

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு........ : 1.40 ஏக்கர் (அ) 5665.55 ச.மீ

மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு பரப்பு : 1710.93 ச.மீ

மனைப்பிரிவு எல்லை........

நிலையில் உள்ள சாலை........

உத்தேச சாலை ........

கோரிய மனைகள்........ : 28

ஒதுக்கிய மனைகள்........: 27

அரசாணை எண் -18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04-02-2019-ன் படி பூங்காவிற்கான தொகை அரசு வழிகாட்டி மதிப்பின்படி மனுதாரரால் தொகை செலுத்தப்பட்டது.

A) <u>பொது ஒதுக்கீடுகள்</u> : <u>உள்ளாட்சிக்கு மனுதாரர் ஒப்படைக்கப்பட்டது.</u>

1. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு : 1710.93 ச.மீ

B) <u>பொது உபயோகம்</u>:

<u>TNCD & BR 2019, 47 (8)- ன்படி தானமாக ஒப்படைக்கப்பட்டது</u>:

1. உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பொது உபயோகம் பரப்பு : 37.65 ச.மீ (0.95%)
2. தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பளவு (TANGEDCO) : 39.70 ச.மீ (1.0%)

<u>மூலை முடக்கு</u>

12.0 மீ சாலை வரை 1.5மீ X 1.5மீ

II. <u>நிபந்தனைகள்</u>:

1. அரசாணை எண் -18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 04.02.2019 -ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண் -16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் 31.01.2020 -ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண். 181, படி ஊ.வ (ம) நகர்புற வளர்ச்சித் துறை 09.12.2020 -ன் படி நிபந்தனைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத்துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும். உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
5. நிலஉரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்-ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர்-ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி-திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம். குத்தகை பத்திரம். பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமைக் கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்புஅல்ல.
8. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும். விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லதக்கதல்ல,
11. இம்மனைப்பிரிவிலிருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லவும் வரைபடத்தில் கான்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே மனைப்பிரிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (EO/UE) செயல் அலுவலர் / யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
13. உத்தேச மனைப்பிரிவின் உள்ளே LT Line, HT Line ஆகியன செல்லுமானால் அவைகளை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கபபட வேண்டும்.

**APPROVAL No. : SWP / DTCP / SALEM / LAYOUT No. : 31 / 2023**

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
சேலம் மாவட்டம்.